1992 செப்டம்பபர் 21[

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன பதிலே இதற்கும் பொருந்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்'

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வள்ளலார் மாவட்டம் அமைக்கும் பணியைத் தொடங்கும் வகையில் தனி ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து, அதற்கான வேலைகளைக் கவனிக்கும் நிலைமையை ஏற்படுத்திய மாண்புமிகு இதய தெய்வம் அவர்களுக்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பாக நன்றி கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாவட்டத் துவக்க விழா எப்போது நடைபெற இருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே துவக்கப்பட வேண்டுமென்பதற்குத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதற்குத் தனி அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். தனி அதிகாரி அதற்கான பணியில் ஈடுபட்டு அதற்கான எல்லைகளையெல்லாம் வரைந்து அனுப்ப இருக்கிறார். முதலில் ஒரு ஆய்வுக் குழு அனுப்பப்பட்டது. அந்தப் புதிய மாவட்டத்தில் எந்தெந்த வட்டம், எந்தெந்த ஊர்கள், எந்தெந்த கிராமங்கள் இருக்க வேண்டுமென்பதையும் குழு ஆய்வு செய்தது. இன்றைக்கு நிலைமைக்கேற்றவாறு விரைவில் மாவட்டத் துவக்க விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 3, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

3—

திருவெண்காடு ஊராட்சியிலுள்ள நூலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

* 9346—திரு. து. மூர்த்தி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழி தாலுக்கா, திருவெண்காடு ஊராட்சியிலுள்ள நூலகத்திற்கு நூலகத்துறை மூலம் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தாலுகா, திருவெண்காடு ஊராட்சியி லுள்ள நூலகத்திற்கு நூலகத் துறை மூலம் கட்டிடம் கட்டு வதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். மேலும் நாகை காயிதே மில்லத் மாவட்டத் திற்கு எத்தனை நூலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? அந்தப் பகுதியிலே ஏராளமான மக்கள் வாழ்வதால் மிகவும் சுலபமான சூழ்நிலை இருப்பதால், அவ சியம் கருணை உள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்த சீர்காழி தாலுகா, திருவெண்காடு ஊராட்சி நூலகத்திற்கு நூலகக் கட்டிடம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் உதவுவார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டுகிற திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இருந்த போது துவக்கப்பட்டது. அதன்படி பல் வேறு நூலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின் றன. பொதுவாக, பொது மக்களுடைய ஆதரவை நாம் எதிர் பார்க்கின்றோம். அந்த அடிப்படையிலே காலி மனைகள் கிடைக்குமேயானால் அங்கே கட்டிடங்கள் கட்டுவது என் கிற ஏற்பாட்டின்படி, தஞ்சாவூர் நூலக ஆணைக் குழுவால் இலவசமாக 33 காலி மனைகள் பெற்று, 33 நூலக கட்டிடங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி இப்போதுதான் அளிக்கப்பட்டு இருக்கிறது. தற்போது மேலும் 8 நூலகங்களுக்கு இலவசமாக காலி மனைகள் பெறப்பட்டுள்ளன; அங்கேயும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இந்தக் குறிப்பிட்ட திருவெண்காடு ஊராட்சியிலே இருக்கின்ற இந்த நூலகத்திற்கு இதுவரையிலும் காலி மனை பெறப்பட வில்லை. அந்தப் பொறுப்பை தனிப்பட்டவர்களோ, உள் ளாட்சி நிறுவனங்களோ ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 4, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.